# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

| | | |
|---|---|---|
| பிரிவு | : | TNPSC Group I தேர்வு |
| பாடம் | : | சமூகப் பிரச்சனைகள் |
| பகுதி | : | **தீவிரவாதம், வகுப்புவாதம் மற்றும் மதவாதம் கலவரங்கள்** |

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப் - 1 முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை**

# தீவிரவாதம், வகுப்புவாதம் மற்றும் மதவாதம் கலவரங்கள்

**முன்னுரை**

**இனவாதம்**

1. இனவாதம் என்பது பல்வேறு சமூகங்கள் சார்ந்த ஓர் கருத்தியல் கொள்கை ஆகும். இதன்படி இங்கு சமுதாயமானது மதங்களாலும், பல்வேறு சமூகங்களாலும் பலவாறாக பிரிக்கப்பட்டுள்ளது. அச்சமூகங்களின் விருப்பங்கள் ஒன்றுக்கொன்று வித்தியாசமாகவும், சில சமயங்களில் முரண்பட்டதாகவும் காணப்படுகின்றது.
2. இனவாதம் என்பது ஒரு சமூகம் (அ) மதத்தைக் சார்ந்த மக்கள் மற்றொரு சமூகத்தைச் சார்ந்த மக்களின் மீது பகைமை உணர்வைக் கொண்டுள்ளதையும் உணர்த்துகின்றது. இங்கு இனவாதிகளால் மதங்களின் வாயிலாக அரசியல் வளர்த்தெடுக்கப்படுகிறது (அ) ஊக்குவிக்கப்படுகிறது. இங்கு மதவாதி என்பவன் அந்த மதத்தை சார்ந்தவன் எனப் பொருள்படமாட்டான் மாறாக அந்த மதக்கொள்கையின் வாயிலாக அரசியல் செய்பவனே மதவாதி எனக் கருதப்படுகின்றான்.

**இந்தியாவில் வகுப்புவாதத்தின் எழுச்சிக்கான காரணங்கள்:-**

1. காலிஸ்தான், நாகா போன்ற பகுதிகளின் தனி மாநில கோரிக்கைகள்.
2. புதிய மாநிலத்திற்கான தீவிர கோரிக்கைகள் மற்றும் போராட்டங்கள் (எ.கா. தெலுங்கானா)
3. யூனியன் பிரதேசங்கள் மாநிலங்களாக மாற்றப்படக்கோரி போராட்டங்கள் (எ.கா. மணிப்பூர், திரிபுரா)
4. உள்நாட்டு எல்லைப் பிரச்சனைகள் மற்றும் நதிநீர் பங்கீட்டு பிரச்சனைகள் (எ.கா. சண்டிகர், காவிரி நதிநீர் பிரச்சனை)
5. சில மதவாத அமைப்புகள் "பிராந்தியவாதத்தை" ஊக்குவிப்பது மட்டுமில்லாமல் அதன் கொள்கைகளும் வன்முறையைக் தூண்டும் வண்ணம் இருக்கும். (எ.கா. சிவசேனா)

6. "மண்ணின் மைந்தர்கள் (Sons of soil) என்ற கோட்பாடு கல்வி, வேலைவாய்ப்பு உள்ளிட்டவைகள்
7. அந்த பிராந்திய மக்களுக்கே வழங்க வேண்டும் என்ற எண்ணத்தை விதைக்கின்றது. (எ.கா. "அசாம்-அசாமியர்க்கே")

**இந்திய சமுதாயத்தின் மீதான அதன் தாக்கம்:-**

1. பெரும்பான்மையாக கொலை செய்யப்படுவர்கள் ஒன்றுமறியா ஏழைமக்களாவர். அவர்களின் வீடுகள், உடைமைகள், வாழ்க்கை, வாழ்வாதாரம் முற்றிலுமாக சிதைக்கப்படுகின்றது.
2. இது அனைத்து பிராந்தியங்களிலும் "மனித-உரிமை மீறலுக்கு" வழிகோலாகிறது.
3. சில நேரங்களில் குழந்தைகளின் பெற்றோர்கள் இறந்துவிடுவதால் அக்குழந்தைகள் பராமரிக்க ஆதாவில்லாத நிலையில், இறுதியாக வாழ்நாள் முழுவதும் அனாதைகளாக வாழ வேண்டிய அவல நிலைக்கு ஆளாகின்றனர்.
4. பார்ப்பனம் (Ghettoization) (அ) பிராமணம் மற்றும் அகதிகள் பிரச்சனைகள் இனக்கலவரங்கள் தூண்டப்பட மற்றொரு பரிமாணங்களாக உள்ளன.
5. இனவதமானது "இரசியலமைப்பு கோட்பாடுகள், மதச் சார்பின்மை மற்றும் மத சகிப்புதன்மை ஆகியவற்றிற்கு அச்சுறுத்தலாக உள்ளது.
6. நாட்டின் "ஒற்றுமை" மற்றும் "ஒருமைப்பாட்டிற்கு" ஊறு வினைவிக்கும் வகையில் உள்ளது.
7. இது மக்களை பல்வேறு இனக்குழுக்களாக பிரிக்கவும், வெறுப்புணர்வை தூண்டுவதில் மட்டுமே பங்காற்றுகிறது.
8. சமூக முன்னேற்றத்திற்கான தடைக்கல்லாகவும், சமுதாயத்தின் பின்னடைவுக்கு காரணமாகவும் உள்ளது.

**இந்தியாவில் இனவாதத்தின் பரிணாம வளர்ச்சி:-**

**முதல் நிலை:**

இங்கு மக்கள் "**ஒரே மதம்**" என்ற கோட்பாட்டில் நம்பிக்கை கொண்டு இருந்தனர். அம்மதமானது எல்லோர்க்கும் பொதுவான "**மதச்சார்பற்ற**" கொள்கைகளைக் கொண்டிருந்தது. இதுவே மதம் சார்ந்த "**சமூக - பொருளாதார**" எண்ணங்கள் கொண்ட சமுதாயம் உருவாக அடிப்படையாக இருந்தது.

**இரண்டாம் நிலை:**

1. பல்வேறு மதங்களின் களஞ்சியமான இந்தியாவில் வேறுபட்ட **"இனவாத கருத்தியல் கொள்கைகள்"**(Communal Ideology) ஊற்றெடுக்க தொடங்கியது.
2. ஒரு மதத்தினரின் சமுதாய, பொருளாதார, கலாச்சார அரசியல் நோக்கங்கள் (விருப்பங்கள்) மற்றொரு மதத்தினரிடம் இருந்து முற்றிலும் வேறுபட்டு இருந்தது. எனவே இந்தநிலை **"சுதந்திரமான இனவாதம் (Liberal Communalism)(அ) மதவாத இனவாதம்" (Moderate Communalism)** என்று அழைக்கப்பட்டது.

**மூன்றாம் நிலை:-**

1. இந்த நிலையில் இனவாதமானது பல்வேறு சமுதாயங்களின் விருப்பங்கள் ஒன்றுக்கொன்று தகாதவைகளாகவும், பகைமை உணர்வு மற்றும் விரோதத்தை வளர்க்க கூடியதாகவும் பரஸ்பர உணர்வுகள் அற்றதாகவும் மாறியது. மேலும் இனவாதிகள் பல்வேறு சமுதாயங்களானது பொதுவான மதச்சார்பற்ற கருத்துகளைக் கொண்டிருக்க முடியாது என்ற கருத்தை ஆணித்தரமாக வலியுறுத்த தொடங்கினர்.
2. தீவிர மதவாதம் என்பது "**பயம்**" மற்றும் "**வெறுப்புணர்வை**" அடிப்படையாகக் கொண்டது. மேலும் மதம், செயல்பாடு மற்றும் நடத்தையில் வன்முறைகளைப் புகுத்தி அரசியல் எதிர்பாளர்களுடன் மொழிப்போரில் ஈடுபடுத்துவது ஆகும். இனவாதமானது 3 நிலையிலும் ஒன்றுக்கொன்று மாறுபட்டதாக அமைந்துள்ளது மட்டுமில்லாமல் தொடர்ச்சியாக ஒன்றின் மீது ஒன்று செயலாற்றுகின்றது. இதுவே நவீன அரசியலின் வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக இருந்தது.
3. இதுவே காலணி ஆதிக்கம் சார்ந்த இந்தியப் பொருளாதாரத்திற்கு விளைபொருளாக அமைந்தும். ஆங்கிலேயர் ஆட்சி இனவாதக் கொள்கையின் வளர்ச்சியில் முக்கியப் பங்காற்றியது.

4. மதவன்முறை என்பது மதவாத குழுக்களிடையே குற்றச் செயல்களைக் தூண்டி அவர்களால் உண்டாகும் வன்முறை செயல்கள் ஆகும். மேலும் வன்முறைக் குழுக்கள், தங்கள் குழுவினரிடையே ஒற்றுமையைப் பேணுவதோடு

மட்டுமில்லாமல், பலியாட்களையும் (**Victims**) குழுவின் உறுப்பினர்களுக்காகவே தேர்ந்தெடுத்துக் கொள்கின்றனர்.

**இந்தியாவின் பெரும் இனக்கலவரங்கள்:-**

**1946-கல்கத்தா கலவரம்:-**

இந்திய வரலாற்றில் கல்கத்தா கலவரம் "நேரடி நடவடிக்கை நாள்" என்ற கருப்பு நாளாக அமைந்தது. வங்காள மாகாணத்தில் இந்து-முஸ்லீம் மக்களிடையேயான வன்மத்தால் இக்கலவரம் உண்டானது.

**1984- சீக்கிய கலவரம்:-**

1984-ம் ஆண்டு நவம்பர் 1-ம் தேதியன்று சீக்கியப் படுகொலை நிகழ்ந்தது. இந்திராகாந்தியின் படுகொலையை அடுத்து டெல்லியின் யமுனா நதிக்கரையருகே நிகழ்ந்த கலவரத்தால் 800 சீக்கியர்கள் கொல்லப்பட்டனர்.

**காஷ்மீர் கலவரம் 1986:-**

1986-ல் முஸ்லீம்-மக்கள் பெரும்பான்மையாக உள்ள காஷ்மீரில் இந்துக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட கலவரம் ஆகும். அம்மாநிலத்தின் "**ஆனந்த் நாக்**" பகுதியில் இந்துக்கள் பெருமளவில் தாக்கப்பட்டனர்.

**1989 - வாரணாசிக் கலவரம்:-**

இந்தியாவின் புனித (புண்ணிய) நகரமாகக் கருதப்படும் வாரணாசியில் 1989 முதல் 1992 வரை தொடர்ச்சியாக மூன்று கலவரங்கள் நிகழ்த்தப்பட்டது. 1989-ல் இந்து-முஸ்லீம் வன்மத்தால் முதல் கலவரம் நிகழ்ந்தது. 2007-ம் ஆண்டு சிறிய கலவரம் ஒன்றும் நிகழ்ந்தது.

**1989- பகல்பூர் கலவரம்:**

**"சில்க் சிட்டி"** என்றழைக்கப்படும் பகல்பூர் இக்கலவரத்தால் மிகவும் மோசமாகப் பாதிப்படைந்தது. இந்தியாவில் சுதந்திரத்திற்கு பின்பு நிகழ்ந்தமிக மோசமான மதக் கலவரமாகும். இந்து-முஸ்லீம் வேற்றுமை காரணமாக 2 மாதம் நீடித்த இக்கலவரத்தினால் 1000 க்கும் மேற்பட்ட மக்கள் பாதிப்படைந்தனர்.

**பம்பாய் கலவரம் 1992 :-**

1992 டிசம்பர் மற்றும் 1993 களில் நிகழ்ந்த கலவரம் பாபர் மசூதி இடிப்பின் காரணமாக நிகழ்ந்த இக்கலவரத்தால் 1000 க்கு மேற்பட்ட மக்கள் இறந்தனர். மேலும் 1993-ல் மும்பையில் நடந்த குண்டுவெடிப்பிற்கும் இதுவே காரணமாகும்.

**குஜராத் கலவரம் 2002 :-**

2002-ம் ஆண்டு தொடர்ச்சியான இந்து-முஸ்லீம் கலவரத்தால் நிகழ்ந்த கலவரம் ஆகும். முஸ்லீம் கலவரக் கும்பலால் முன்கூட்டியே திட்டமிட்டு "**சபர்மதி விரைவு இரயில்**" எரிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து நிகழ்ந்த கோத்ரா இரயில் எரிப்பு மற்றும் அகமதாபாத்தின் "**நரோடா பாட்டியா**" கலவரம் ஆகியவை உச்ச நிலைக்கு சென்றது.

**டெகாஸ்கா கலகம் 2010 :-**

2010-ம் ஆண்டு மேற்கு வங்காளத்தின் டெகாஸ்கா பகுதியில் முஸ்லீம் மதவாதக் கும்பலால் இந்து மக்கள் மற்றும் இந்துக்களின் புனித இடங்களான கோவில்கள் மற்றும் கடைகள் பெருமளவில் எரிக்கப்பட்டன.

**அஸ்ஸாம் கலவரம் 2012 :-**

2012 ம் ஆண்டு ஜுலையில் இந்தியாவின் போடா இனத்தவர்க்கும், வங்காள தேசத்தில் இருந்து புலம்பெயர்ந்த முஸ்லீம் மக்களுக்கும் இடையே இனக் கலவரம் மூண்டது. 80 பேர்க்கு மேல் இறப்பு மற்றும் பல ஆயிரம் மக்கள் வீடுகளை இழந்தனர்.

**முஷாபர் நகர் கலவரம் 2013:-**

உத்திரபிரதேசத்தில் உள்ள முசாபர் நகரில் 2013-ல் நிகழ்ந்த இந்து-முஸ்லீம் கலவரத்தால் 48 பேர் இறந்தனர். 93 பேர் காயமடைந்ததாக தகவல்கள் வெளிவந்தன.

**பிராந்தியவாதம் (Regionalism)**

1. பிராந்தியவாதம் என்பது "தனது பிராந்தியத்தின் மீதான பற்று (அ) விசுவாசம் மற்றும் துணை தேசியவாதம் எனவும் அழைக்கப்படுகிறது. ஒரு பிராந்தியத்தின் மீதான அதீத அன்பின் வெளிப்பாடு பிராந்தியத்தின் சாராம்சமாகும்.

2. பிராந்தியவாதம் என்பது இந்தியாவின் அரசியல் ஒருங்கிணைப்பிற்கான துணை நிகழ்வாகும். புதிய அரசியல் கொட்பாடான "நடுவு நிலைமை (Centrality)"-யில் இருந்து விலகி நிற்கிறது.

**ABSU-ன் முதன்மையான கோரிக்கைகள்:-**

**ABSU-→ All Bodo Student's Union**

1. இந்தியாவில் அஸ்ஸாம் மாநிலத்தில் 1967 -ம் ஆண்டு அரசியல் சார்பற்ற மாணவர் இயக்கமாக (ABSU) அனைத்து போடோ மாணவர் அமைப்பு உருவாக்கப்பட்டது.
2. காலணி ஆதிக்கத்திற்கு முந்தைய அஸ்ஸாமின் பல்வேறு இஸ்லாம் சமுதாயக் குழுக்களின் ஆட்சியில் நிகழ்ந்த சுரண்டல்கள் (Exploitation) காரணமாகவே "தனி போடோ லேண்ட்" கோரிக்கை உதயமானது.

**சகோதரத்துவம் :-**

1. சகோதரத்துவம் என்பது சில நேரங்களில் தெளிவான (அ) முறையான அமைப்புகள் என்ற சித்தாந்தத்தையும், சில நேரங்களில் இரகசிய சமுதாய அமைப்புகள் என்ற கருத்தாக்கத்தையும் கொண்டுள்ளது.
2. சகோதரத்துவம் என்பது ஓர் இயக்கமாக தோழமையுடனும், சகோதர மனப்பாங்குடனும், அறிவு சார்ந்த, உடல் சார்ந்த, அறநெறிசார்ந்த, மதம் சார்ந்த, சமூக முன்னேற்றம் சார்ந்த செயல்பாடுகளில் ஒத்துழைப்புடனும், ஈடுபாட்டுடனும் ஓர் சூழ்நிலையில் இணைந்து செயல்படுவது ஆகும்.
3. சகோதரத்துவத்தின் திறவுகோல் என்பது தனது குழுவின் உறுப்பினரை வெற்றியை நோக்கி உந்தித் தள்ளுவது ஆகும்.
4. மேலும் இது தனி மனித விருப்பு வெறுப்புகள் மற்றும் பொதுவான நோக்கங்களைச் சார்ந்து உள்ளது.
5. "இணைந்து பணியாற்றுதல்" என்பது சகோதரத்துவத்தின் பல நிலைகளில் மிகவும் முக்கியமானது ஆகும். (சமூகம், வணிக, மத நிகழ்வுகளில். . . )

# தீவிரவாதம்

**முன்னுரை:**

1. ஐ.நா. செயலகத்தில் அறிக்கைப்படி தீவிரவாதம் என்பது தனிமனிதனாலோ அல்லது ஒரு சட்டத்தினராலோ, ஒரு தனிமனிதனுக்கோ அல்லது ஒரு கூட்டத்தினருக்கோ ஏற்படும் பிரச்சினைகள் பொது மக்களுக்கு பயத்தை ஏற்படுத்துமாயின், அது தீவிரவாதம் என்று வரையறை செய்யப்படுகின்றது.
2. "தீவிரவாதம்," "வகுப்பு வாத கலவரம்", "உள்நாட்டுக் கலவரம்", "புரட்சிகள்", "மிதமிஞ்சிய அரசிற்கு எதிரான நடவடிக்கைகள் போன்றவை அனைத்தும் மக்களுக்கு எதிரான கொடுமைகளையே ஆதாரமாகக் கொண்டு செயல்படுகின்றன.

**தன்மைகள் :**

1. அரசிற்கு எதிரானதாகவோ (அல்லது)
2. சமூகத்திற்கு எதிரானதாகவோ அமைகிறது.
3. நடைமுறை சாத்தியமற்ற நோக்கங்களுக்காக மனித உயிர்களை கொல்லுதல், சமூகக் கொடுமைகளை அரங்கேற்றல்.
4. பொதுச் சொத்துக்களை சேதப்படுத்தி, அரசிற்கு எதிராக சட்டங்களை மீறுதல்.
5. அச்சுறுத்தல், பயம் போன்ற உணர்வுகளை ஏற்படுத்துவதன் மூலம் நோக்கங்களை அடைய முயலுதல்.
6. நேர்மை சிந்தனையற்ற நிலையில், அப்பாவி பொது மக்களை பாதிப்படையச் செய்தல்.
7. தீவிரவாதம், " கொடுமைகளின் உச்சம்", "மனிதத் தன்மை செயல்" என வரையறுக்கப்படுகிறது.

**நோக்கங்கள் :**

1. தங்களின் தீய நோக்கங்களுக்காக அரசை தங்களின் கட்டுப்பாட்டிற்கு வைத்திருந்தன.
2. வன்முறையில் ஈடுபட்டு தங்களின் கோரிக்களை அடைதல்.
3. தீவிரவாத தேவைகளை நிறைவேற்ற அரசை நிர்பந்திதல்.
4. உள்நாட்டு நிலைத் தன்மை மற்றும் பொருளாதார வளர்ச்சியைத் தடுத்தல்.

5. தீவிரவாதத்திற்கு இளைஞர்களை ஊக்குவிப்பதன் மூலம் வளர்த்தல்.
6. மக்களிடையே அச்ச உணர்வை ஏற்படுத்தி அரசின் பாதுகாப்புப் படை மீது நம்பிக்கை இழக்கச் செய்தல்.
7. தீவிரவாதக் குழுக்கள், பின்பற்றுபவர்கள், அவர்களிடையே நம்பிக்கையுணர்வு வளர்த்தல் போன்ற செயல்களில் ஈடுபடுதல்.

**தீவிரவாதம் தோன்றக் காரணங்கள் :**

1. "தீவிரவாதம் ஒரு நாளில் தோன்றுவதில்லை, அது தொடர்ச்சியான பல்வேறு அழுத்தங்களால் தோன்றுகிறது".
2. பொறுப்பற்ற, திறனற்ற அரசு நிர்வாக அமைப்பு
3. ஊழல் மலிந்த அரசுத் துறைகள்
4. பாதுகாப்புப் படையின் திறமையின்மை, இயலாத நிலை
5. பழைமையான தீவிரவாத எண்ணங்கள், பாரம்பரிய நடைமுறை
6. உலகளாவிய தகவல் தொடர்பு வளர்ச்சியின் மூலம் தீவிரவாத தகவல்கள் எளிதில் பரிமாற்றம்.
7. சமுதாய ஒடுக்கு நடைமுறை, வேலை வாய்ப்பில் ஒடுக்கப்பட்ட சமுதாயத்தினரின் ஆதங்கம்.
8. வறுமை, பசி, வறட்சி போன்றவைகளில் அரசின் மற்ற செயல்பாடு.
9. எளிதில் ஆயுதங்கள், வெடி பொருட்கள் கிடைத்தல்.
10. அந்நிய நாடுகளிலிருந்து தீவிரவாதக் குழுக்களுக்கு பணம் பரிமாற்றம், ஊக்குவிப்பு செயல்பாடுகள்.
11. திறமையற்ற உளவுத் துறை
12. நீதித்துறையில் உள்ள குறைபாடுகள்.
13. ஏற்றத் தாழ்வுகள்.
14. சாதி, மத, இனம் மீது கொண்டுள்ள அதீத பற்று
15. இளைஞர்களிடையே காணப்படும் அறியாமை, கல்வியறிவின்மை

**தீவிரவாத்தால் ஏற்படும் விளைவுகள் :**

1. அரசின் நிர்வாக செயல்பாடுகள் மற்றும் பாதுகாப்புப் படை மீது நம்பிக்கை இழத்தல்
2. நிலைத் தன்மையின்மை, பொது அமைதி சீர் குலைவு
3. பொதுச் சொத்துக்கள் பாதிப்படைதல், மனித உயிரிழப்பு

4. பொருளாதாரம ஸ்திரத் தன்மை இழத்தல், சமூக வளர்ச்சியின்மை
5. சுற்றுலா, தொழில், விவசாய வளர்ச்சிகள் பாதித்தல்
6. பொதுமக்களின் இடம் பெயர்தல் அதிகரித்தல்.

**தீவிரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகள் :**

தீவிரவாதம் பல்வேறு அமைப்புகள் சார்ந்த, பல்வேறு நடவடிக்கைகளுடன் தொடர்புடையது. எனவே இது சார்ந்த ஒழிப்பு நடவடிக்கைகள் அனைத்தும் அனைவரது நலன் சார்ந்த ஒரு செயலாக அமைதல் வேண்டும். அவை, நீண்ட கால மற்றும் குறுகிய கால நடவடிக்கைகளாக பகுக்கப்படுகின்றது.

**குறுகிய கால நடவடிக்கைகள் : (பாதுகாத்தல்)**

1. இதிர தண்டனைகள், கடுமையான நடவடிக்கைகள் மூலம் தீவிரவாதிகளை மனமாற்றம் அடையச் செய்தல்.
2. உளவுப் படையில் புதிய தொழில் நுட்பங்களையும், தகவல் தொடர்பு சாதனங்களையும் பயன்படுத்துதல்.
3. சட்டங்களில் காணப்படும் குறைகளை நீக்கி, தீவிரவாதத்தை ஒடுக்க புதிய சட்ட நெறிமுகைளை உருவாக்குதல்.
4. தீவிரவாதம் குறித்த தகவல் அளிப்பவருக்கு உரிய பாதுகாப்பு வசதிகளை மேம்படுத்துதல்.
5. தீவிரவாதத்திற்கு எதிரான சிறப்புப் படைப்பிரிவினரை உருவாக்கு முறையான பயிற்சி அளித்தல்.
6. கிராம பாதுகாப்பு குழுக்களை ஏற்படுத்தி மக்களிடையே விழிப்புணர்வை உருவாக்குதன் மூலம் தீவிரவாத தடுப்பு நடவடிக்கைளை மேற்கொள்ளல்.

**நீண்ட கால நடவடிக்கைகள் : (வருமுன் காத்தல்)**

1. சந்தேகத்திற்குரிய இளைஞர்கள் குழுக்கள், அமைப்புகளை முறையாக கண்காணித்தல், ஆராய்தல்.
2. நாட்டுப்பற்றை வளர்க்கக் கூடிய (ஊடகங்கள் மூலம்) செயல்பாடுகளில் அரசு ஈடுபடுதல்.
3. தவறாக வழிநடத்தப்படும் இளைஞர்களுக்கு முறையான வேலை வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்தித் தருதல்.

4. அரசின் மேன்மைகளை விளக்கி, தீவிரவாத எண்ணங்களை ஒழித்தல்.
5. இளம் தொழில் முனைவோர்களை ஊக்குவித்து தொழில் பெருக்க நடவடிக்கைகளை கையாளுதல்.
6. ஏற்றத் தாழ்வுகளை களைந்து, வறுமை, வறட்சி நிலையை ஒழித்தல்.
7. போதிய கல்வியறிவு வழங்குவதன் மூலம் அறியாமையை அகற்றுதல்.
8. பொருளாதார வளர்ச்சியை பெருக்குவதன் மூலம், அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்குதல்.

**ஐக்கிய நாடுகள் சபையின் நடவடிக்கைகள் :**

1. 1997 - தீவிரவாத அணுகுண்டு தாக்குதல்களை ஒடுக்குதல். (International Convention for the suppressions of terrorist bombings)
2. 1999 - தீவிரவாத மேம்பாட்டிற்கான நிதிதியுதவிகளை தடுத்தல். (International Convention for the suppressions of finding of terrorist)
3. 2005 - ஐ.நா.வின் பொது அவையில், நியூ பார்க் அணு ஆயுத தீவிரவாதத்தை ஒடுக்குதல் நிறைவேற்றம். (International Convention for the suppression of acts of Nuclear terrorist bombings)
4. 14வது சர்வதேச தீவிரவாத தடுப்பு நடவடிக்கைக்கான மாநாட்டில் உலகளாவிய எதிர் தீவிரவாத போர்த்திறம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**இந்தியாவில் தீவிரவாதம் :**

1. இந்தியா 4 விதமான தீவிரவாத இயக்கங்களை கண்டுள்ளது.
   - பஞ்சாப் - காலிஸ்தான் தொடர்பான தீவிரவாதம்
   - காஷ்மீர் - பிரிவினைவாதிகளின் போராட்டம்
   - வங்காளம், பீகார், ஜார்க்கண்ட், சட்டீஸ்கர், ஆந்திர பிரதேசம் - நக்சலைட்டுகள்.
   - அஸ்ஸாம் - உல்ஃபா தீவிரவாதம்.
2. வட கிழக்கு மாநிலங்களான நாகலாந்து, மிசோரம், மணிப்பூர், திரிபுரா, போன்ற இடங்களில் வளர்ச்சியின்மை, சமுதாய பின்னடைவு, அங்கீகாரமின்மை போன்ற காரணங்களால் தீவிரவாத செயல்பாடுகள் காணப்படுகின்றன.
3. நக்சலைட்டுகள் நில பிரிவினை தொடர்பான தீவிரவாத நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.

4. காஷ்மீர் மாநிலத்தில் பிரிவனை, வேற்றுமை, வளர்ச்சியின்மை, மதம் சார்ந்த மற்றும் பாகிஸ்தான் தீவிரவாத செயல்பாடுகளில் சர்வதேச பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.
5. காலிஸ்தான் தீவிரவாத செயல்பாடுகள் சீக்கிய தீவிர எனப்படுகின்றது, இதன்படி தங்களுக்கென்று தனி அடையாளத்தை உருவாக்க "தனிநாடு" என்ற கோரிக்கையுடன் செயல்படுகின்றனர்.

**இந்திய அரசின் நடவடிக்கைகள் :**

1. தடுப்புக் காவல் சட்டம் 1950
2. இச்சட்டப்படி அரசு குற்றம் புரிந்ததாகக் கருதப்படும் எவரையும் காவலில் வைக்க அதிகாரம் பெற்றது.
3. உள்நாட்டு பாதுகாப்புச் சட்டம் பராமரிப்பு -1971
4. தேசிய பாதுகாப்புச் சட்டம் 1980 (NSA)
5. தீவிரவாத மற்றும் பலவந்த செயல்கள்
6. தடுப்புச் சட்டம் (TADA - Terrorist & Disruptive Preventions Act)
7. இச்சட்டம் MISA மற்றும் NAS சட்டங்களை விட மிக அதிக அதிகாரம் இருந்ததால், தவறாக பயன்படுத்தப்பட்டது, எனவே 1995 இல் இது நீக்கப்பட்டது.
8. பயங்கரவாத தடுப்புச் சட்டம் 2001 (POTA) பல்வேறு தரப்பினர் இச் சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்ததால் இது 2004 ல் நீக்கப்பட்டது.
9. ஐ.நா. சபையின் தீவிரவாதத்திற்கு எதிரான சட்டத்திலும், பாதுகாப்பு கவுன்சிலின் தீவிரவாதத்திற்கு எதிரான தீர்மானம் - 1973ல் இந்தியா கையெழுத்திட்டது.

**அமைப்புகள் :**

1. தேசிய விசாரணை அமைப்பு - 2009 (NSA)
   - சட்டத்திற்கு புறம்பான செயல் தடுப்பு அமைப்பு - 2008.
2. அயல் நாட்டு பரிவர்த்தனை பாதுகாப்பு மற்றும் கள்ளக் கடத்தல் தடுப்பு - 1974 (COFEPOSA)
3. போதைப் பொருள் மற்றும் சட்டத்திற்கு புறம்பான பொருள்கள் தடுப்பு - 1988 (PITNDSAPA)

**இந்தியாவில் முக்கிய தீவிரவாதத் தாக்குதல்கள் :**

1. மும்பை குண்டு வெடிப்பு - 12, மார்ச் - 1993 - 260 பேர் பலி

2. கோவை குண்டு வெடிப்பு - 14,பிப்ரவரி - 1998 - 46 பேர் பலி
3. பாராளுமன்றத் தாக்குதல் - 13, நவம்பர்- 2001
4. மும்பை இரயில் நிலைய தாக்குதல் - 26 நவம்பர் 2008
5. அகமதாபாத் அக்ஷர்தாம் கோயில் தாக்குதல் - 24, செப் - 2002
6. டெல்லி தொடர் குண்டு வெடிப்பு - 29 அக் -2005
7. ஜெய்ப்பூர் வெடிகுண்டு தாக்குதல் - 13, மே 2008
8. அஸ்ஸாம் குண்டு வெடிப்பு (கௌகாத்தி) -30 அக், 2008
9. காஷ்மீர் சட்டப் பேரவைத் தாக்குதல் - 1, அக், 2001

**தீவிரவாதம் எதிர் கொள்ளும் முறைகள் :**

தீவிரவாதத்தை எதிர்கொள்ளும் முறைகளை 3 வகையாக பிரிக்கலாம்.

1. இஸ்ரேல் முறை
2. அமெரிக்க முறை
3. இந்திய முறை

**இஸ்ரேல் முறை :**

1. 4 முக்கிய நிலைக் கோட்பாடுகளை கொண்டுள்ள தீவிரவாதிகளிடம் பேச்சு வார்த்தை கூடாது.
2. தீவிரவாதிகளின் மீது திடீர் தாக்குதல்.
3. மிக கடுமையான பாதுகாப்பு அணுகுமுறை
4. பாலஸ்தீன் தீவிரவாதிகளின் மீது கடுமையான தாக்குதல் கையாளுதல்.
5. இம்முறை எதிர் - தீவிரவாத முறை எனவும் அழைக்கப்படுகிறது.

**அமெரிக்க முறை :**

1. உலகப் பொருளாதாரத்தில் முக்கிய இடம் பெறுவது தீவிரவாதத்திற்கு எதிராக கடுமையான நிலைப்பாடு உள்ளது.
   - தீவிரவாத ஆதரவு நாடுகளுக்கு எதிராக வர்த்தக தடை, ஏற்றுமதி தடுப்பு
2. தீவிரவாத நாடுகளில் அணுகுண்டு தாக்குதல். எ.கா: கியூபா - 1962, லிபியா - 1986
3. இம்முறையில் தீவிரவாதத்தை அழியோடு அழித்தல் போக்கு கடைபிடிக்கப்படுகிறது.

**இந்திய அணுகுமுறை :**

1960க்கு பிறகு தீவிரவாதத்தால் இந்தியா பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

- ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் பெரும்பாலும் பிரிவினை, வகுப்பு வாத கலவரங்கள் மேலோங்கு காணப்படுகின்றன.

  Operation Blue Star - பஞ்சாப் - ஜீன் 6, 1948 மற்றும்
- Operation Black Thunder - அஸ்ஸாம் - போன்ற தீவிரவாத எதிர் நடவடிக்கைகள் தோல்வியிலேயே முடிவடைந்தது.
- இந்தியாவில், எதிர் - தீவிரவாத நடைமுறையானது காவல்துறை மற்றும் இராணுவத்தால் மேற்கொள்ளப்படுகிறது.
- இந்த அணுகுமுறைகள் அனைத்தும் ஒவ்வொரு நாட்டின் பொருளாதார, அரசியல் பலத்தை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்படுகின்றது. அதாவது,
- இந்தியாவில் - எதிர் - தீவிரவாதம்
- அமெரிக்காவில் - தீவிரவாத ஒழிப்பு
- இஸ்ரேலில் - எதிர் மற்றும் ஒழிப்பு நடவடிக்கைகள் இணைந்து காணப்படுகிறது.

**வடகிழக்கு மாநிலங்களில் ஏற்படும் புரட்சி (அ) கிளர்ச்சி, கலவரம்:**

1. இந்திய அரசாங்கத்திற்கு எதிராக வன்முறையைத் தூண்டும் விதமாக உள்ளூர் வாசிகள் அல்லது குழுக்கள் ஏற்படுத்தும் அபாயகரமான நிகழ்வுகளே கலவரம், கிளர்ச்சி எனப்படுகிறது.
2. இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களில் அனைத்து பகுதிகளிலும் இவ்வகையான கிளர்ச்சிகள் காணப்படுகின்றன.

**அஸ்ஸாம் :**

1. 1980களில் இவ்வகையான நடவடிக்கைகள் ஆரம்பம்
2. அஸ்ஸாமில் உள்ள வெளிநாட்டவர்களது பெயரை அம்மாநிலத்தில் உள்ள தேர்தல் வரைவிலிருந்து நீக்குதல் மற்றும் அவர்களை வெளியேற்றுதல்.
3. UMF மற்றும் ULFA இராணுவ அமைப்புகள் தோற்றம்.
4. அனைத்து போடோ மாணவர் சங்கம் ஏற்படுத்தும் தனி மாநில கோரிக்கை கிளர்ச்சியாக மாறியது.
5. போடோலேலண்ட் தனித்துவ மையம் 1994ல் ஆரம்பிக்கப்பட்டு இன்றளவும் அதை பிரச்சினை தீர்க்கப்படவில்லை.

**மிசோரம் :**

1966லிருந்தே கிளர்ச்சி, கலவரங்கள் தனித்துவ அடையாளமின்மை, மிசோரம் (ம) மிசோராமில்லாத பழங்குடியினருக்காக இடையிலான தகராறுகள்.

**மணிப்பூர் :**

1. 1976ல் இருந்து புரட்சிகள் தோற்றம்
2. (People's liberation Army) மக்கள் விடுதலைப் படை தோற்றம் - 1978
3. மைத்ரி மற்றும் குகி மலைவாழ் மக்கள்.

**நாகலாந்து :**

1. 1951ல் இருந்து கிளர்ச்சி
2. அடையாள சின்னம் முக்கிய பிரச்சினை
3. அஸ்ஸாம் மலைப்பகுதியில் பெரு நாகலாந்து அமைத்தல.
4. தேசிய விடுதலை மையம் இதில் தீவிரம் கட்டுகிறது.

**திரிபுரா :**

திரிபுரா தேசிய இயக்கம், திரிபுரா புலிகள் படை போன்ற அமைப்பு திரிபுராவில் இருந்து வங்காளத்திற்கு இடம் பெயர்தலை தடுக்க வலியுறுத்தி போராடுகிறது.

**மேகாலயா :**

மலைவாழ் மற்றும் மலைவாழ் அல்லாத மக்களிடையேயான பிரச்சினைகள் முக்கிய அங்கம்.

**வகுப்புவாத வன்முறை :**

1. வகுப்பு வாத வன்முறையின் போது மக்கள் மற்றொரு குழுவினருக்கு எதிராக செயல்படுவர். மக்களின் இச்செயல்பாடுகள், எதிர்பார்ப்பதற்கு அப்பாற்பட்டதாகவும், கட்டுப்படுத்த இயலாததாகவும் இருக்கும்.
2. இவ்வன்முறையை சமூக புறக்கணிப்பு மற்றும் சமூக ரீதியான சுரண்டலுக்கெதிரானதாகவும் அமையும்.

**இந்திய வகுப்பு வாத கலவரங்கள்:**

1. பஞ்சாப் அதன் எல்லை - 1946 -1948
2. கிழக்கு இந்தியா, கல்கத்தா, ஜாம்ஷெட்பூர் - 1964

3. பீஹார் பகல்பூர், குஜராத் - 1990
4. கர்நாடகா - பெல்காம் - 1991
5. உத்திரப் பிரதேசம் - வாரணாசி - 1992
6. உத்திரப் பிரதேசம் - முகாலர் நகர் - 2012

**நக்சல் இயக்கங்கள் :**

1. நக்சல் இயக்கங்கள் தோன்றிய ஆண்டு 1967 மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த காணு சன்யால், சாரு மஜீம்தார ஆகியோரால் நில உரிமையாளர்களை எதிர்த்து ஆரம்பிக்கப்பட்டதே நக்சலைட். இவர்கள் மாவேயிஸ்ட் பொதுவுடைமை பிரிவைச் சேர்ந்தவாக்ள் 1970 களில் நக்சலைட் பல்வேறு பிரிவுகளாக மாற்றம் பெற்றது.
2. சாரு மஜீம் தாரர் - நிர்மூல மாக்கும் திட்டம் மூலம் நக்சல் இந்தியாவில் பரவியது.

**நக்சல்களின் பரவல் :**

இந்தியாவில் சத்தீஸ்கர், ஒடிஸா, ஜார்க்கண்ட், மேற்கு வங்காளம், மகாராஷ்டிரா, உத்திரப்பிரதேசம் போன்ற மாநிலங்களில் பரவியுள்ளனர்.

**நோக்கங்கள் :**

1. அரசை கைப்பற்றுதல்.
2. நக்சல்களின் எண்ணிக்கையை அதிகரித்து அதன் ஆக்கிரமிப்புகளை பெருக்குதல்.
3. கொரில்லா குழுக்கள் மூலம் சுதந்திரமான அமைப்பை ஏற்படுத்துதல்.
4. நில உடைமையாளர்களிடமிருந்து நிலங்களை அபகரித்து நிலமில்லதோருக்கு வழங்குதல்.
5. காவல்துறை, பொதுமக்களிடையே அச்ச உணர்வை ஏற்படுத்தி தங்களது வலிமையை அதிகரித்தல்.

**நக்சல் பரவலுக்கான காரணங்கள் :**

1. நில உடைமையாளர்களால் உள்சூர் வரிசகள் நசுக்கப்பட்டமை.
2. அரசின் திட்டங்கள் முறையாக மக்களை சென்றடையாதது.
3. ஏற்றத் தாழ்வு சமுதாயம்
4. அதிகார மற்றும் செல்வக் குறைவு
5. வறுமை, வேலைவாய்ப்பு குறைவு

6. நில பகிர்வு முறைகளில் முறைகேடு
7. பொறுப்பற்ற அரசு நடவடிக்கைகள்
8. சிறு குழுக்களின் தோற்றம் மோசனமான குடியுரிமை அமைப்பு பற்றாக்குறையான காவல் துறைப்படை மற்றும் ஊழல் மலிந்த அரசு நிர்வாகம்.

**முக்கியச் சட்டங்கள் :**

1. TADA - Terrorist and Disruptive Prevention Act 1985.
2. தீவிரவாத மற்றும் பலவந்த செயல்கள் தடுப்புச் சட்டம் 1985
3. 1985 மே கொண்டு வரப்பட்டு தீவிரவதாம் (ம) தீவிரவாதிகளை கட்டுப்படுத்த ஏற்படுத்தப்பட்டது.

**சிறப்புகள் :**

1. சிறப்பு நீதிமன்ற அமைப்பு
2. பிணையில் வெளிவர தடை
3. ஒரு வருடம் வரை புலனாய்வு மேற்கொள்ள அனுமதி.
4. அனைத்து விசாரணைகளும் ஒளிப்படுத்துதல்.
5. காவல்துறை காட்சியங்களை ஏற்றுக்கொள்ளுதல்.

**குறைபாடுகள் :**

1. சிறுபான்மையினருக்கு எதிராக மாநில அரசு இச்சட்டத்தைப் பயன்படுத்துதல்.
2. பொதுமக்களுக்கு எதிராக காவல்துறை பயன்படுத்துதல்.
3. 1 குறைவாக சாதகமான தீர்ப்பு விகிதம்
4. ஆயுதம் தொடர்பான பல்வேறு குற்றங்கள்
5. சிறு குற்றங்களுக்கு கடுமையான தண்டனைகள்

**தேசிய பாதுகாப்புச் சட்டம் 1980 :**

1. இச்சட்டம் பாராளுமன்றத்தால் இயற்றப்பட்டது, இதன் முக்கிய நோக்கம், "பாதுகாப்பு அளித்தல் மற்றும் சில வழக்குகள் தொடர்புடைய வன்முறைகளிலிருந்து பாதுகாத்தல்"
2. இச்சட்டம் ஜம்மூ - காஷ்மீர் மாநிலம் தவிர ஏனைய இந்திய பகுதிகள் அனைத்திற்கும் பொருந்தக் கூடியது.
3. இச்சட்டத்தின் மூலம் மத்திய / மாநில அரசுகளுக்க ஒரு சந்தேகத்திற்குரிய தனிநபரை கைது செய்து காவலில் வைத்த அதிகாரம் மற்றும் வெளிநாட்டிலிருந்து

பாதகமான ஆயுத தடுப்பு மற்றும் சட்டம் ஒழுங்கு பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளும் அதிகாரம்.

4. இச்சட்டம் வெளிநாட்டினரது சந்தேகத்திற்குரிய நபரை காவலில் வைக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.
5. இச்சட்டம் சரண்சிங் 1980களில் ஏற்படுத்தப்பட்டது.

**தேசிய புலனாய்வு மையம் :**

1. NIA எனப்படும் தேசிய புலனாய்வு மையம், 2008ல் ஏற்படுத்தப்பட்டது.
2. இது தீவிரவாதம் வன்முறை தொடர்பான வழக்குகளை ஆராய மத்திய அளவில் ஏற்படுத்தப்பட்டது.
3. இதன் மூலம் 2009ல் NIA மற்றும் அது தொடர்பான அங்கங்களுடன், ஐ.நா. அமைப்புகள், புலனாய்வுக் குழுக்கள், சர்வதேச அமைப்புகளுடன் இணைந்து பணியாற்றுகிறது.

**செயல்பாடுகள்**

1. இது சுதந்திரமான, தீவிரவாதத்திற்கு எதிரான அமைப்பு.
2. மாநில அரசின் அனுமதி இல்லாமலேயே வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம்.
3. NIA அதிகாரிகளுக்கு வழக்ககளை விசாரணை மேற்கொள்ள அனைத்து அதிகாரங்களும் வழங்பட்டுள்ளது.
4. தற்போதைய WIAவின் இயக்குநர் செயலர் திரு. சரத்குமார் (Sharad Kumar, Director General)

**வினாக்கள்**

1. இந்தியாவில் தீவிரவாத இயக்கங்கள் பற்றி அதனைத் தடுக்கும் அரசின் நடவடிக்கைகள் பற்றியும் எழுதுக.
2. நக்சல் இயக்கங்கள் பற்றி சிறுகுறிப்பு வரைக.
3. இந்தியாவில் வகுப்புவாதத்தின் எழுச்சிக்கான காரணங்கள் பற்றியும் அதன் வளர்ச்சி பற்றியும் விளக்கி எழுதுக.